# பிரெஞ்சு தத்துவம்

## சிறு குறிப்புகள்



மர்வான் முஹம்மத்

# பிரெஞ்சு தத்துவம்

## சிறு குறிப்புகள்

மர்வான் முஹம்மத்

**Language:**
Tamil

*PIRANCHU THATHTHUVAM - SIRU KURIPPUKAL*
*(French Philosophy – A Short Description)*

**Author:**
Marvan Mohamed

**First Edition:**
May, 2021

**Address:**
No. 129/6, Moulana Road, Semmanodai 07,
Valaichchenai, Batticoloa, Sri Lanka.
Tel.: +94 767097460
E-mail: mmarvan@gmail.com

**மொழி:**
தமிழ்

***பிரெஞ்சு தத்துவம் – சிறு குறிப்புகள்***

**ஆசிரியர்:**
மர்வான் முஹம்மத்

**முதலாம் பதிப்பு:**
மே மாதம், 2021

**முகவரி:**
இல.129/6, மவ்லானா வீதி, செம்மணோடை 07,
வாழைச்சேனை, மட்டக்களப்பு, ஸ்ரீ லங்கா.
தொ.பே.:+94 767097460
மி.அஞ்சல்: mmarvan@gmail.com

# உள்ளடக்கம்


**அறிமுகம்** 1

**மத்திய கால பிரெஞ்சு மெய்யியல்** 2

பீட்டர் அபேலார்ட் 2

**16ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்** 4

மிஷேல் ஐக்வெம் டி மொண்டைக்னே 4

**17ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்** 5

ரேனோ டேக்கார்ட் 5

நிக்கோலஸ் மாலேபிரான்ச் 7

**18ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்** 8

மொண்டெஸ்கியூ 8

வால்டேர் 8

ஜீன் – ஜாக் ரூஸோ 9

டெனிஸ் டிடெரோட் 9

**19ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்** 11

அகஸ்டே கொம்டே 11

பெர்டினாண்ட் டி சஸூர் 11

ஹென்றி பெர்க்சன் 13

**20ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்** 16

**1. அறிவியல் மெய்யியல்** 16

ஹென்றி பொய்ன்காரே 16

காஸ்டோன் பெச்லார்ட் 17

ஜீன் கவெய்லஸ் 17

ஜூல்ஸ் வுய்லெமின் 17

**2. தோற்றப்பாட்டியல்** 17

இம்மானுவல் லெவினாஸ் 17

மாரிஸ் மெர்லியோ பொண்டி 18

பவுல் ரிக்கூர் 18

**3. இருத்தலியம்** 18

ஜீன்–பால் சார்த்தர் 19

அல்பேர்ட் காமுஸ் 19

சைமோன் டி பியூவோர் 20

**4. அமைப்பியல்வாதம்** 20

கிளாட் லெவி–ஸ்ட்ராஸ் 20

ரோலண்ட் பார்த்ஸ் 21

ஜாக் லக்கான் 21

 லூயிஸ் அல்தூஸ்ஸர் 21

**பின்–அமைப்பியல்வாதமும், பின்–நவீனவாதமும்** 23

ஜீன்–பிரான்ஸொய்ஸ் லியோடார்ட் 23

மிஷேல் ஃபூக்கோ 23

ஜாக் டெரிடா 24

ஜீன் பாட்ரிலார்ட் 24

கில்லஸ் டெலூஸ் 25

ஹெலீன் சிக்சஸ் 26

**முடிவுரை** 27

**உசாத்துணைகள்** 28

**அறிமுகம்**

**தத்துவத்தையும், அதன் இயல்பையும் கற்றுக்கொள்வதற்கும், அறிந்துகொள்வதற்கும் சிறந்தவழி அதன் வரலாற்றைக் கற்றுக்கொள்வதும், அறிந்துகொள்வதுமாகும் எனக் கூறுவார்கள். இது எல்லாவகை தத்துவங்களுக்கும் பொருந்தும். இந்தவகையில், பிரெஞ்சு தத்துவத்தையும், அதன் இயல்புகளையும் அறிந்துகொள்ள அதன் வரலாற்றைக் கற்றுக்கொள்வதும், அறிந்துகொள்வதும் அவசியமாகின்றது. இந்தவகையில், இந்நூலில் அதன் வரலாற்றைப் பேசுவதனூடாக அதன் இயல்புகளை விளக்குவதற்கு முற்பட்டிருக்கிறோம்.**

**பிரெஞ்சு தத்துவமானது, ஜேர்மன் மற்றும் பிரித்தானிய தத்துவத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதோடு, பொதுவாக மத்திய காலத்தில் நிலவிய பீட்டர் அபேலார்த்** *(Peter Abelard)* **இன் புலமைவாதம் தொடக்கம், ரேனே டேக்கார்ட்** *(René Descartes)* **இன் நவீன மெய்யியலின் உருவாக்கத்தினூடாக இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் தத்துவம்** *(Philosophy Of Science)*, **இருத்தலியம்** *(Existentialism)*, **தோற்றப்பாட்டியல்** *(Phenomenology)*, **அமைப்பியல்வாதம்** *(Structuralism)* **மற்றும் பின்நவீனத்துவம் எனும் பின்–நவீனவாதம்** *(Postmodernism)* **வரைக்கும் பல நூற்றாண்டு காலமாக நவீன ஐரோப்பியத் தத்துவங்களில் பாரிய செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. இந்தவகையில், பிரெஞ்சு தத்துவத்தின் இயல்புகளாவன பன்முகத்தன்மையைக் கொண்டனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.**

## மத்திய கால பிரெஞ்சு தத்துவம்

### பீட்டர் அபேலார்ட்

பீட்டர் அபேலார்ட் *(Peter Abelard)* என்பவர் 1079 முதல் ஏப்ரல் 21, 1142 வரையிலான காலப்பகுதியில் வாழ்ந்த ஒரு புலமைவாத மெய்யியலாளரும், இறையியலாரும், தருக்கவியலாளரும் ஆவார். பிரெஞ்சு வரலாற்றில், ஹேலோய்ஸ் *(Héloïse)* என்பருடனான அவருடைய வாழ்வும், காதலும் பற்றிய கதை, அவரைப் புகழ்பெற்ற ஒருவராக மாற்றிவிட்டது. சேம்பர்ஸ் வாழ்க்கை சரித்திர அகராதி *(The Chambers Biographical Dictionary)* அவரை "12ம் நூற்றாண்டின் அதிகூர்மையான சிந்தனையாளர் மற்றும் திடகாத்திரமான இறையியலாளர்" என்று விவரித்துள்ளது.

அபேலார்ட்டின் மெய்யியலின் பொதுவான விசேட அம்சம் என்னவெனில், தனக்கு முன்னர் இருந்த எவரையும் விட அவர் கொண்டிருந்த தத்துவமயமாக்கலின் புலமைவாத அணுகுமுறையாகும். அதாவது, அப்போது நிலவிவந்த திருச்சபையின் கோட்பாடுகளுக்கு ஒரு முறைப்படுத்தப்பட்ட பகுத்தறிவுபூர்வமான வியாக்கியானங்களை வழங்கினார். இவ்வாறான அவரது சொந்த வியாக்கியானங்கள் சில சமயங்களில் கண்டனத்திற்கு உள்ளாகிய போதிலும், திருச்சபையின் தலைவர்களின் ஒப்புதலுடன் 13ம் நூற்றாண்டின் கிறிஸ்தவ கோட்பாடுகளுக்கான விரிவாக விவரிக்கப்பட்ட ஒரு பொது சிந்தனைத் திட்டமாக வளர்த்தெடுக்கப்பட்டது.

தனது மரணத்திற்குப் பிறகு அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக பலம் பெற்றுவந்த அரிஸ்டோட்டிலின் தத்துவ அதிகாரம் தொடர்ந்தும் நிறுவப்படுவதற்கு இவர் பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நேரத்தில்தான், கிரேக்க சிந்தனையாளர்களின் மற்றைய அனைத்துப் படைப்புகளைத் தொடர்ந்து, முதல் முறையாக கிறிஸ்தவப் பள்ளிகளில் சம்பூரணப்படுத்தப்பட்ட தருக்க முறையான அல்லது ஏரணத்திற்கான கருவியான "ஆர்கானன்" *(Organon)* போதிக்கப்பட்டது.

அபேலார்ட்டிற்கு முந்திய காலத்தில் நிலவிவந்த யதார்த்தவாதத்திற்கு அடிப்படையாக பிளேட்டோவின் அதிகாரம் நடைமுறையில் இருந்தது.

அபேலார்ட் தனது இயங்கியலுக்கு அப்பால், ஒழுக்கவியலில் தத்துவ சிந்தனையின் மிகப்பெரிய செயற்பாட்டைக் கொண்டிருந்தார். இந்தவகையில், ஒழுக்கப் பண்பு என்று வரையறுக்காது விட்டாலும் கூட குறைந்த பட்சம் மனித நடவடிக்கைகளின் தார்மீக மதிப்பு எனும் வகையில் தீர்மானிப்பது போன்ற அகவய எண்ணங்களுக்கு குறிப்பிட்டளவு அழுத்தப்பாட்டை வழங்கியிருந்தார்.

இந்தக் கோணத்தில் நவீன ஊகங்களில் சிலவற்றை எதிர்வுகூறிய நிலையில் அமைந்த அவருடைய சிந்தனையானது மிகவும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. ஏனெனில், அவருடைய புலமைவாத ஆதரவாளர்கள் ஒழுக்கநெறித் துறையில் குறைந்தபட்ச அளவிலாவது

சாதித்துள்ளனர். அரிஸ்டோட்டிலின் மிகப்பெரிய ஒழுக்கநெறி விசாரணைகள் *(Ethical Inquiries)* தங்களால் நன்கறியப்பட்டதன் பின்னரும் கூட நடத்தை விதிகளையும், கோட்பாடுகளையும் தூய தத்துவார்த்த வாதங்களின்கீழ் கொண்டுவருவதற்கு அரிதாகவே முயன்றுள்ளனர்.

மூன்றாம் போப் இன்னோசெண்ட் அவர்கள், அபேலார்ட்டின் "லிம்போ" கோட்பாட்டை *(Doctrine of Limbo)* ஏற்றுக்கொண்டார். இது ஹிப்போவின் அகஸ்டினுடைய *(Augustine of Hippo)* அசல் பாவம் *(Original Sin)* பற்றிய கோட்பாட்டின் திருத்தியமைக்கப்பட்ட ஒரு கோட்பாடாகும். முதலில் நம்பியபடி, ஞானஸ்நானம் பெறாத குழந்தைகள் நேராக நரகத்திற்குச் செல்வதில்லை. மாறாக, லிம்போவின் ஒரு சிறப்புப் பகுதியாகிய "லிம்பஸ் இன்ஃபாண்டியம்" என்ற இடத்திற்குச் செல்கிறார்கள் என்ற கருத்தை வத்திக்கான் ஏற்றுக்கொண்டது. எனவே, அவர்கள் எந்த வலியையும் உணர மாட்டார்கள். அவர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சியும் கிடையாது. ஏனெனில், அவர்களை உருவாக்கிய தெய்வத்தை அவர்களால் காண முடியாமல் போய்விடுகிறது என்பதாக அவர் கூறினார்.

## 16ம் நூற்றாண்டு பிரெஞ்சு தத்துவம்

### மிஷேல் ஐக்வெம் டி மொண்டைக்னே

மிஷேல் ஐக்வெம் டி மொண்டைக்னே *(Michel Eyquem de Montaigne)* (1533–1592) என்வர் ஆரம்பத்தில் ஒரு கத்தோலிக்கராக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. என்றாலும், தனது பிழுவாதமறுப்புக் கொள்கையின் நிலைகள் அவரை பழமைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கின்ற மரபுக்கு எதிரான பிரெஞ்சு ஆன்மாவின் *(Anti-Conformist French Spirit)* தந்தையாக மாற்றின. அவருடைய இலக்கியப் படைப்புகள் அவருடைய நம்பிக்கைகளுக்கான சிறிய மாதிரிகளை உள்ளடக்கியதாக உள்ளன. அவை, சுயசரிதை மற்றும் சாதாரண நிகழ்வுகளால் முழுமைப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. இந்த ஆக்கங்கள் தொடர்பிலான அவருடைய நோக்கம், அவருடைய குடும்பத்தினர் அவரை நினைவுகூறுவதற்காக ஏதாவது ஒன்றை விட்டுச் செல்வதாக இருந்தது. "கட்டுரைகள்" *(Essays)* என்ற வார்த்தையைப் பயன்படுத்திய முதல் நபர் இவர்தான். இவருடைய எழுத்துக்கள் ஷேக்ஸ்பியர், ரூஸோ மற்றும் நீட்சே ஆகியோரின் மீது பெரும் செல்வாக்கைச் செலுத்தியிருந்தது.

கியூ சாய்ஸ் ஜே? *(Que sais-je?)* என்ற சொற்றொடரில் சுருக்கமாகக் கூறப்பட்ட அவரது தீவிரமான "ஐயம்" ரேணோ டேக்காட்டின் ஐயத்திற்கு ஒரு வினையூக்கியாக அமைந்ததாகக் கருதப்படுகின்றது.

## 17ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்

### ரேனோ டேக்கார்ட்

ரேனோ டேக்கார்ட் *(René Descartes)* (1596–1650) நவீன தத்துவத்தின் நிறுவுனர் என அழைக்கப்படுகிறார். நவீன தத்துவமானது பிரான்சில் ரேனோ டேக்கார்ட்டின் தத்துவத்துடன் தொடங்கியதாகக் கருதப்படுகின்றது. "முதல் மெய்யியல்" பற்றிய அவருடைய மெடிடேஷன் நூலானது உள்பொருளியல் தொடக்கம் அறிவாய்வியல் வரைக்குமான மெய்யியல் சிந்தனைகளின் கருப்பொருளை மாற்றியமைத்தது. முந்தைய நூற்றாண்டுகளில் சிந்தனையின் மேலாதிக்க வடிவமாகத் திகழ்ந்த புலமைவாதத்திலிருந்து மெய்யியலில் நிறுவப்பட்டிருந்த அரிஸ்டோட்டிலிய சிந்தனைப் பிடிவாதங்களின் மரபை வென்றெடுத்தது. அதே நேரத்தில் எதிர்கால தலைமுறைத் தத்துவவாதிகளுக்கு மிகவும் அடிப்படையான சில மெய்யியல் பிரச்சினைகள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தது.

ரேனோ டேக்கார்ட் தனது மெய்யியல் ஆய்வுகளின் போது அறிவியல்களில் உள்ள நிச்சயமற்ற தன்மையையும், "செக்ஸ்டஸ் எம்பிரிகஸ்" *(Sextus Empiricus)* இன் வெளியீட்டுப் பதிப்புகள் கிடைக்கத்தக்கதாக மாறிய போது, ஐரோப்பா முழுவதும் பரவிய "தீவிர ஐயவாத"த்தையும் *(Radical Scepticism)* கவனத்தில் எடுத்துக்கொண்டார்.

டேக்கார்ட், எல்லா அறிவியல்களையும் அதன்மீது வைத்து, படிப்படியாக கட்டியெழுப்புவதற்கு சாத்தியமான ஒரு சந்தேகத்திற்கு இடமில்லாத பின்புலத்தை கண்டுபிடிக்க விரும்பினார். இதனால், நிச்சயமற்றதாகத் தோன்றிய எதையும் நிராகரித்து, வல்லுறுதியான அறிவை *(Apodectic Knowledge)* மட்டுமே உண்மையாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்தார்.

தனக்கு ஏற்பட்ட ஒரு முழுமுதல் ஐயமானது, வெளி உலகையும், ஐம்புலன்கள், கணிதவியல் மற்றும் தருக்கம் ஆகியவற்றினால் அடைந்த தகவல்களையும் நிராகரிப்பதற்குரிய சாத்தியப்பாட்டை ஏற்படுத்திய பிறகு, டேக்கார்ட்டினால் குறைந்தது வல்லுறுதியான அறிவாக இருக்கக் கூடிய ஒரு விசயத்தையாவது கண்டுபிடிக்க முடிந்தது. அவர் தானே ஐயம்கொண்டுள்ளதனால், தான் இருப்பைப் பெற்றுள்ளதை உறுதியான ஒன்றாகக் கருதினார். இந்தவகையில். "நான் சிந்திக்கிறேன். ஆகவே, இருக்கிறேன்" *(Cogito Ergo Sum)* என்றார். இது, பின்னாளில் கார்ட்டீசிய தத்துவத்தின் அடிப்படை மூலதத்துவமாக மாறியது.

தான் "கொஜிடோ"வை *(Cogito)* தெளிவாகவும், ஐயமற்றதாகவும் உணர்ந்ததன் மூலம், தான் தெளிவாகவும், ஐயமற்றதாகவும் உணர்கின்ற எதுவும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதாக டேக்கார்ட் வாதிட்டார். அதனைத் தொடர்ந்து, ஒரு எல்லையற்ற முழுமுதல் இருப்பின் *(Infinite Being)* உள்ளமையையும், அதேநேரம் வரையறுக்கப்பட்ட இருப்புகளால் *(Finite Being)*

எல்லையற்ற கருத்துக்களை உருவாக்க முடியாமையையும், அதனால், ஒரு எல்லையற்ற இருப்புதான் கருத்தை தனது சிந்தனையில் உட்செலுத்திருக்க வேண்டும் என்பதையும் தான் புரிந்துகொள்ள முடிவதாக அவர் வாதிட்டார். அவர் இந்த வாதத்தை, ஒரு சர்வ–கருணைமிக்க கடவுளின் இருப்புதான், எல்லா விஞ்ஞானங்களையும் சாத்தியமாக்குகின்ற சந்தேகத்திற்கு இடமில்லாத அடித்தளமாகத் திகழ்வதை நியாயம் காணப் பயன்படுத்தினார்.

இவ்வாதம், பொதுவாக "உள்பொருளியல் கருத்தாடல்" *(Ontological Argument)* என்று அறியப்படுகின்றது. பலர், டேக்கார்ட்டின் நோக்கங்களைப் பாராட்டிய போதிலும், இந்த முடிவில் அவர்கள் திருப்தியடையவில்லை. சிலர், அவரை "சுற்றுநிலை"யைக் *(Circularity)* கொண்டவர் என்று குற்றம் சாட்டினர். அவருடைய உள்பொருளியல் கருத்தாடல், "உண்மை" *(Truth)* பற்றிய அவருடைய வரைவிலக்கணத்தை ஒரு முக்கூற்றாகப் *(Premise)* பயன்படுத்துகின்றது. அதேசமயம், அவருடைய உண்மை பற்றிய வரைவிலக்கணத்திற்கான ஆதாரமாக, அவருடைய உள்பொருளியல் கருத்தாடலே ஒரு முக்கூற்றாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தவகையில், ஒரு "சுற்றுநிலை" கொண்டதான அவருடைய உள்ளமை பற்றிய வாதம் விமர்சனத்திற்குரியதாகும். என்றாலும், அவருடைய ஆன்மா ஒன்றே அறியத்தக்கதும், நிலைபேறுகொண்டதும் என்ற "ஆத்மமையவாதம்" *(Solipsism)*, உண்மை மற்றும் வெளி உலகின் இருப்பு ஆகியவற்றின் பிரச்சினைகள் 17ம் நூற்றாண்டின் மேற்கத்திய சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மற்றொரு முக்கியமான பிரச்சினையானது, டேக்கார்ட்டின் "சாராம்ச இருமைவாதம்" *(Substance Dualism)* என்பதிலிருந்து எழுந்தது. டேக்கார்ட்டைப் பொறுத்தவரை, ஒரு "சாரம்" *(Substance)* என்பது வேறு எல்லாவற்றிலிருந்தும் சுயாதீனமாகக் கருதப்படக் கூடியதாகவும், வேறு எதையும் விட்டு சுயாதீனமாக இருக்கக் கூடியதாகவும் உள்ளது. மனதானது எல்லாவற்றையும் நிச்சயமற்றதாக சந்தேகிக்கும் போது, வேறு எல்லாவற்றிலிருந்தும் சுயாதீனமானதாக உள்ள ஒன்றுதான் அது என டேக்கார்ட் கருதினார்.

அவ்வாறே, மனம் மட்டுமே இருக்கும் ஒரு உலகத்தை உருவாக்க முடிகின்ற கடவுளை கருத்திற்கொள்ளும் போது, உடலிலிருந்து வேறுபட்ட ஒரு சாரமாக மனதை வரையறுக்க அவர் முனைந்தார். டேக்கார்ட்டைப் பொறுத்தவரை, மனம் ஒரு நீட்டிக்கப்படாத சாரப்பொருளாகவும் *(Unextended Substance)*, உடல் நீட்டிக்கப்பட்ட பொருளாகவும் வரையறுக்கப்படுகிறது. இது, மனமும், உடலும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புகொள்வது சாத்தியம் என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பியிருந்தது.

**நிக்கோலஸ் மாலேபிரான்ச்**

மனம் – உடல் பற்றிய பிரச்சினைக்கான ஒரு தீர்வு கார்ட்டீசிய பிரெஞ்சு மெய்யிலாளரான நிக்கோலஸ் மாலேபிரான்ச் *(Nicolas Malebranche)* (1638 – 1715) என்பவரிடமிருந்து வந்தது. மாலேபிரான்ச், வேறுபட்ட வகையான சாரப்பொருட்கள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ள முடியாது என்று கூறினார். உண்மையில், ஒரே மாதிரியான சாரப்பொருட்கள் ஒன்றுக்கொன்று தொடர்புகொள்ள முடியாது. ஏனெனில், இவற்றில் தேவையான காரணங்கள் எதுவும் உணரப்படவில்லை. ஒவ்வொரு முறையும் ஒருவர் ஒரு காரணத்தை உணரும்படியாகவும், அல்லது ஒருவர் ஒரு விளைவை உணரும்படியாகவும் அதனை வெளிப்படுத்துகின்ற படைக்கப்படாத ஒரு சாரப்பொருளாக கடவுள் இருக்கிறார் என்பதை அவர் முன்மொழிந்தார். எனவே, மனதுக்கும், உடலுக்கும் இடையிலான இயைபியக்கப்பாடு இறைசித்தத்தினாலேயே நிகழ்கிறது எனும் இக்கோட்பாடு “(இறைத்) தலையீட்டியல்பு வாதம்” *(Occasionalism)* என்று பெயரிடப்பட்டது.

மாலேபிரான்ச், தனது சொந்த காலத்திலேயே நன்கு அறியப்பட்டவரும், பிரபலமானவரும் ஆவார். என்றாலும், அதனையடுத்து மேற்கத்திய மெய்யியல் வரலாற்றில் ஓரளவு தெளிவற்ற நபராக மாறிவிட்டார். இருப்பினும், ஸ்பினோசா மற்றும் ஹியூம் போன்றோரின் மீதான தன் செல்வாக்கினூடாக அவருடைய தத்துவம், மேற்குலக மெய்யியலில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அவர்களுடைய காரணக்கோட்பாடு *(Causation)* பற்றிய பிரச்சினை மாலேபிரான்ச் உடைய இறைத் தலையீட்டியைபுவாதத்தினால் தாக்கத்திற்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலோட்டமான ஒற்றுமைகளுக்கு அப்பால் மாலேபிரான்சுடனான எந்தவொரு தொடர்பையும் தான் நிராகரித்திருந்த போதிலும் ஜோர்ஜ் பேர்க்லியை அவர் பாதித்திருந்தார் என்று கூறுவதும் சாத்தியமானதே.

## 18ம் நூற்றாண்டு பிரெஞ்சு தத்துவம்

பிரெஞ்சு தத்துவமானது, 18ம் நூற்றாண்டில் ஆழமான அரசியல்தன்மை கொண்டதாக மாறியது. இது, அறிவொளிக் *(Enlightenment)* கொள்கைகளில் பெரிதும் உள்நின்று இயங்கச் செய்தது. அதன் மெய்யியலாளர்களில் பலர், தேவாலயம் மற்றும் அரசை விமர்சிப்பவர்களாகவும், பகுத்தறிவையும், அதன் மேம்பாட்டையும் ஊக்குவிப்பவர்களாகவும் மாறினர். இந்த மெய்யியலாளர்கள், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் அரசியல், கருத்தியல்களின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மொண்டெஸ்கியூ

சார்லஸ் டி செகண்டட் பரோன் டி மொண்டெஸ்கியூ *(Charles de Secondat, baron de Montesquieu)* (1689 – 1755) ஒரு சமூக வர்ணனையாளரும், அரசியல் மெய்யியலாளரும் ஆவார். அவருடைய கோட்பாடுகள் அமெரிக்காவின் நிறுவுநர்களின் மீது ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. மாநில அதிகாரங்கள் சட்டவாக்கம், நிர்வாகம் மற்றும் நீதித்துறைக் கிளைகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்ற அவருடைய நம்பிக்கை, அமெரிக்க அரசியலமைப்பின் கீழ் அதிகாரங்களை பிரிப்பதற்கான அடிப்படையை உருவாக்கியது.

“சட்டங்களின் ஆன்மா” *(The Spirit of the Laws)* எனும் தனது நூலில், மனிதனும், சமூகங்களும் காலநிலையால் பாதிக்கப்படுகின்றன என்ற கருத்தை கோடிட்டுக் காட்டினார். வெப்பநிலையானது, சூட்டுநிலை மக்களை உருவாக்குகின்றது. குளிர்ந்த காலநிலை மக்களை தூரமாக ஒதுக்கி விடுகிறது. அதேநேரம் பிரான்ஸின் இலேசான காலநிலை அரசியல் அமைப்புகளுக்கு ஏற்றதாக உள்ளது.

இக்கோட்பாடானது, ஜெர்மானியாவில் வெளிப்படுத்தப்பட்ட இதேபோன்ற மனோபாவத்தால் தாக்கத்திற்கு உள்ளாகி வந்திருக்கலாம். இந்த மனோபாவம், மொண்டெஸ்கியூவினால் அடிக்கடி ஆய்வு செய்யப்பட்டு வந்த “டாசிட்டஸ்” *(Tacitus)* என்ற எழுத்தாளரின் “இனவியல்” *(Ethnographic)* என்ற நூலில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### வால்டேர்

வால்டேர் *(Voltaire)* (1694 – 1778) தேவாலயத்தின் பிடிவாதக்கோட்பாடு *(Church Dogma)* மற்றும் பிரெஞ்சு நிறுவனங்கள் *(Institutions)* ஆகியவற்றின் மீதான தனது விமர்சனங்களின் ஊடாகவும், சிவில் உரிமைகளைப் பாதுகாக்க தான் முனைந்ததன் ஊடாகவும், சமூக சீர்திருத்தத்திற்கு தான் ஆதரவளித்ததன் ஊடாகவும் மேற்குலகில் அறிவொளியைக் *(Enlightenment)* கொண்டுவந்தார். தான் உருவாக்கப் போராடிய சிவில் சுதந்திரங்கள் ஒரு சுயாதீனமாகச்

செயலாற்றுவதற்கான உரிமையையும், மதத் தலையீடற்ற சுதந்திரத்தையும் கொண்டதாக இருந்தன.

வால்டர், தனது நுற்பாக்கள் *(Aphorisms)* மற்றும் "கேண்டைட்" என அழைக்கப்படும் "லீப்னிஸ்" பற்றிய தனது நகைச்சுவை பழிப்புரைகள் ஆகியவற்றுக்காக இன்றும் கூட மிகவும் சிறப்பாக நினைவு கூறப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. கேண்டைட் என்பது, லீப்னிஸிய இன்பவாத *(Leibnizian Optimism)* நம்பிக்கைகளில் தொடர்ச்சியான கஷ்டங்களுக்குப் பிறகு மீட்சியைப் பெற்ற ஒரு இளம் விசுவாசி பற்றிய கதையைக் கூறுகிறது.

## ஜீன் – ஜாக் ரூஸோ

ஜீன் – ஜாக் ரூஸோ *(Jean-Jacques Rousseau)* (1712 – 1778) "கலை மற்றும் விஞ்ஞானம் பற்றிய சொல்லாடல்" *(Discourse on the Arts and Sciences)* எனும் நூலில் கலையும், விஞ்ஞானமும் மானுட ஒழுக்கத்தின் ஊழல்களாகும் என்று குறிப்பிட்டதன் ஊடாக அறிவொளியின் முற்போக்கு அறிவியல்வாதம் *(Progressive Scientisms)* என்பதிலிருந்து தன்னை வேறுபடுத்திக் கொண்டார். மேலும், மனிதன் இயற்கையில் நல்லவன். ஆனால் சமூகத்தால் சிதைக்கப்பட்டான் என்ற தனது கோட்பாட்டின் மூலம் சர்ச்சையை ஏற்படுத்தினார். இது, "அசல் பாவம்" என்ற கிறிஸ்தவ கோட்பாட்டின் நேரடி முரண்பாடாக அமைந்திருந்தது. அவரது சில கோட்பாடுகள் தொடர்ந்தும் சர்ச்சைக்குரியவையாக இருந்தன.

அதாவது, "பொது விருப்பு" என்று அழைக்கப்படும் அவரது கோட்பாடு, பாசிசத்தின் மீது குற்றம் சாட்டுவதாகவும், தன் சோசலிச கொள்கைகளை பாராட்டுவதாகவும் அமைந்திருந்தது. ரூஸோவின் சிந்தனை பிரெஞ்சு புரட்சியை மிகவும் பாதித்திருந்தது. தனியார் சொத்து பற்றிய அவரது விமர்சனம் மார்க்சிய சித்தாந்தத்திற்கு ஒரு முன்னோடியாகக் காணப்பட்டது. மேலும், ரூஸோவின் புகைப்படம் ஒன்றுதான் இம்மானுவேல் காண்ட்டின் வீட்டிற்கு அருள் புரிந்த படமாக சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர், பிரெஞ்சு புரட்சியாளர்களால் மிகவும் பாராட்டப்பட்டார். 1794இல் அவரின் கைவசமாயிருந்து மிஞ்சியவை பாரிஸ் நகரிலுள்ள பாந்தியோனுக்கு மாற்றப்பட்டன.

## டெனிஸ் டிடெரோட்

டெனிஸ் டிடெரோட் *(Denis Diderot)* (1713 – 1784) "கலைக்களஞ்சியம்" *(Encyclopedia)* ஐ உருவாக்குவதில் ஒரு முக்கிய ஒத்துழைப்பாளராக பணியாற்றியவர். கலை மற்றும் அறிவியல்கள் அனைத்தையும் உள்ளடக்கிய தகவல்களின் முறையான தொகுப்பான "என்சைக்ளோபீடியா" பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

டிடெரோட் பலமுறை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டார். அப்போதிருந்த மதக்குருக்களின் “பிரசங்கக் கட்சி” என்சைக்ளோபீடியாவை விரும்பவில்லை. அது, பிரபுத்துவத்திற்கு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. ஏனெனில், அது அரசு மக்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும் என்பதையும், மாறாக தன்னையோ, மதச் சுதந்திரத்தையோ, கருத்துச் சுதந்திரத்தையோ மற்றும் அறிவியல் மற்றும் தொழில்துறையின் மதிப்பையோ அல்ல என்பதை வலியுறுத்தியிருந்தது.

இதனால், புத்தக விற்பனையாளர் தண்டனைக்குப் பயந்து சர்ச்சைக்குரியதாகக் கருதப்பட்ட அனைத்து கட்டுரைகளையும் அகற்றத் தொடங்கினார். டிடெரோட் இருபது ஆண்டுகளாகப் பணியாற்றிய “என்சைக்ளோபீடியா” மீள்திருத்தம் செய்ய முடியாத அளவுக்கு அழிந்து போனது.

## 19ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியல்

### அகஸ்டே கொம்டே

அகஸ்டே கொம்டே *(Auguste Comte)* [1798 – 1857] சமூகவியலையும், புலனறிவாதத்தையும் நிறுவியவர் ஆவார். இவர் மொண்ட்பெல்லியரில் பிறந்த ஒரு பிரெஞ்சு தத்துவஞானி ஆவார். "புலனறிவாதம்" *(Positivism)* எனும் எண்ணக்கருவின் நிறுவுநராக அவர் திகழ்ந்தார். இந்தப் பதத்தின் நவீன அர்த்தத்தில் முதலாவது அறிவியல் மெய்யியலாளராக அவரைக் கருத முடியும். கற்பனாவாத சோசலிஸ்டான ஹென்றி டி செயிண்ட சைமன் *(Henri De Saint-Simon)* என்பவரால் வலுவாக செல்வாக்குக்கு உள்ளான கொம்டே, பிரெஞ்சு புரட்சியின் சமூக சீர்கேட்டை சரிசெய்யும் முயற்சியில் புலனறிவாத மெய்யியலைத் தோற்றுவித்தார். அது, அறிவியல்களின் மீது கட்டப்பட்ட ஒரு புதிய சமூகக் கட்டளைப்படிமம் *(Social Paradigm)* என்று அழைக்கப்பட்டது.

"சமூகப் பரிணாம வளர்ச்சி" பற்றிய ஒரு கணிப்பீட்டை கொம்டே வழங்கியிருந்தார். அதன்படி, ஒரு பொது "மூன்று நிலைகளின் சட்டத்தின்" படி, உண்மையைத் தேடுவதில் சமூகமானது மூன்று கட்டங்களுக்கு உட்படுகிறது.

1. இறையியல் ரீதியிலானது *(Theological)*
2. பௌதீகவதீதம் சார்ந்தது *(Metaphysical)*
3. நேர்வு அளவை முறையிலானது *(Positive)*

பெரிய அளவில் வெற்றியளிக்காத போதிலும், 19ம் நூற்றாண்டில் பல்வேறு மதச்சார்பற்ற மனிதமையவாத *(Secular Humanist)* அமைப்புகளின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தியிருந்த ஒரு ஒருங்கிணைந்த "மனிநேய சமயத்தை" *(Religion of Humanity)* அறிமுகப்படுத்த கொம்டே முயன்றார். அதற்காக, "பிறர்நல விருப்புவாதம்" *(Altruism)* எனும் சொல்லை உருவாக்கி, அதனை வாழ்க்கைத் தத்துவமாக விளக்கினார்.

கார்ல் மார்க்ஸ் மற்றும் ஜான் ஸ்தூவர்ட் மில் போன்ற சிந்தனையாளர்களின் படைப்புகளில் தாக்கம் செலுத்தக்கக் கூடிய அளவுக்கு, 19ம் நூற்றாண்டின் சிந்தனையில் கொம்டே கணிசமான செல்வாக்கைக் கொண்டிருந்தார் என்பதாகக் கருதப்படுகின்றது.

### பெர்டினாண்ட் டி சஸூர்

பெர்டினாண்ட் டி சஸூர் *(Ferdinand De Saussure)* [1857 – 1913] மொழியியல் *(Linguistics)*, குறியீட்டியல் *(Semiotics)* மற்றும் அமைப்பியல்வாதம் *(Structuralism)* ஆகியவற்றின் நிறுவுநராகக் காணப்படுகிறார். அவர், பல ஆண்டுகள் பாரிஸில் கற்பித்த ஒரு சுவிஸ் மொழியியலாளர் ஆவார்.

தனிப்பட்ட சொற்களின் வரலாறு மற்றும் மொழிகளின் ஒப்பீடுகள் ஆகியவை பற்றிய கற்கையிலிருந்து, மொழியின் அடிப்படையான கட்டமைப்புகள் பற்றிய கற்கைக்கு நகர்வதன் ஊடாக மொழிவரலாற்றியல் *(Philology)* என்பதிலிருந்து மொழியியலை வேறுபடுத்துவதில் அவர் அக்கறை கொண்டிருந்தார்.

அவரது படைப்புக்களின் சிறியளவிலான விளைவும், அவருடைய மரணத்திற்குப் பின்னர் பதிப்பிக்கப்பட்டவற்றில் பெரும்பாலானவையும் மொழியியல், குறியீட்டியல் மற்றும் அமைப்பியல்வாதம் ஆகியவற்றுக்கு அடித்தளமாக அமைந்ததோடு, சமூகம், மொழி மற்றும் மனித மனம் ஆகியவற்றை வடிவமைக்கும், வரையறுக்கும், பாதிக்கும் அடிப்படைக் கட்டமைப்புகளைக் கருத்திற்கொண்ட மெய்யியல் சிந்தனைப் பள்ளியாக மாறியது.

சஸூர் மொழியை இரண்டு பகுதிகளாப் பிரித்தார்.

1. மொழிவடிவம் *(Langue)*: இது, ஒரு சமூகத்திற்குச் சொந்தமான குறிகள் மற்றும் விதிகளின் அமைப்பாகும்.

2. பேச்சுவடிவம் *(Parole)*: இது, குறிப்பிட்ட சமூகத்தினூடாக நிகழுகின்ற பேச்சு தொடர்பான தனியன்களின் செயற்பாடுகளாகும். இதை, சஸூர் சதுரங்கத்திற்கும், சதுரங்க விளையாட்டிற்கும் ஒப்பிட்டு விளக்கினார். ஏனென்றால், எவரும் அதனை விளையாடுவதற்கு முன்னர், அந்த விளையாட்டின் விதிகளையும், கட்டமைப்பையும் அறிந்து கொள்ள வேண்டும்.

சஸூரைப் பொறுத்தவரை, எந்தவொரு மொழியின் இன்றியமையாத அலகாக சொல்லும், குறியும் உள்ளது. மொழியைப் போன்றே சொல்லையும் அவர் இரு பிரிக்கமுடியாத பகுதிகளாகப் பிரித்தார்.

1. குறிப்பான் *(Signifier)*: இது, சத்த வடிவமாகும்.

2. குறிப்பீடு *(Signified)*: இது, குறிப்பானுடன் தொடர்புடைய கருத்தாகும்.

ஒரு குறி, அதன் பொருளை எவ்வாறு பெறுகின்றது என்பது, மொழியின் ஊடாக உள்ளதோ அல்லது எதுவாக உள்ளதோ என்பதைப் பொருத்து அமைவதில்லை. உதாரணமாக, "நாய்" என்ற சொல்லுக்கு நாய் என்று பொருள். ஏனெனில், அது பூனை, பறவை அல்லது சோளக்கதிர்கள் என்று அர்த்தப்படுவதில்லை. சஸூருக்கு மொழி மிகவும் இரட்டைத்தன்மையானது என்பது ஏற்கனவே தெளிவான ஒன்றாகும். உண்மையில், மனிதன் அடிப்படையில் இருகவர்ப்பு முறைகளில் *(Dichotomies)* சிந்திக்கிறான் என்று அவர் கருதினார். சஸூரைப் பொறுத்தவரை, மொழியைப் படிக்கும் முறையானது இரட்டைத்தன்மை வாய்ந்ததாகும்.

1. ஒத்திசைவானது *(Synchronical)*: அதாவது, குறிப்பிட்ட காலத்தின் ஒரு உறைந்த தருணத்தின் ஊடாக ஒரு முழுமையான அமைப்பாக அதனைப் படிக்கலாம்.

2. வரலாற்று ரீதியானது *(Diachronical)*: அதாவது, அதன் வரலாற்று வளர்ச்சியின் ஆய்வாக அதனைப் படிக்கலாம்.

அமைப்பியல்வாதிகள் கலாசாரத்தின் ஒத்திசைவான அம்சங்களில் கவனம் செலுத்தினர் என்று கூறமுடியும். அதேநேரம், பின்–அமைப்பியல்வாதிகள் மிகவும் இரட்டைத்தன்மையான, நிர்ணயிக்கும் பண்புகளை நோக்கிய எதிர்வினையாக ஒருவகை தெளிவற்ற பகுதியை கண்டடையும் முயற்சியில் கலாசாரத்தின் வரலாற்று அம்சங்களில் கவனம் செலுத்தினர் என்பது தெளிவாகிறது.

**ஹென்றி பெர்க்சன்**

ஹென்றி பெர்க்சன் *(Henri Bergson)* (1859 – 1941) ஐ சஸ்ஸுருடன் ஒப்பிடுகையில், சஸ்ஸுர் தனது காலத்தில் ஓரளவு தெளிவற்ற சிந்தனையாளராகக் காணப்பட்டார். ஆனால், ஹென்றி பெர்க்சன் ஓரளவு பிரபலமானவராகத் திகழ்ந்துள்ளார். அவர் 20ம் நூற்றாண்டின் சிந்தனையை வடிவமைத்ததில் ஒரு முக்கிய பங்காளராகக் காணப்படுகிறார். அவருடைய மெய்யியலானது, கல்வியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் 1889ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெர்க்சனின் மரணம் வரை பரிச்சயமானதாக இருந்தது.

வில்லியம் ஜேம்ஸ், ஆல்ஃபிரட் நோர்த் வைட்ஹெட், ஜீன்–பால் சார்த்ரே, இம்மானுவேல் லெவினாஸ், மாரிஸ் மெரிலியோ–போண்டி மற்றும் நாவலாசிரியர் மார்செல் ப்ரூஸ்ட் ஆகியோரின் மீது பெரும் செல்வாக்கை ஹென்றியின் படைப்புகள் கொண்டிருந்தபோதிலும், அவருடைய படைப்புக்களிலான ஆர்வம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வெகுவாகக் குறைந்துவிட்டது. இருப்பினும், 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுய–பிரகடனப்படுத்தப்பட்ட பெர்க்சோனியன் கில்லஸ் டெலூஸின் படைப்புகள் மூலமாக ஹென்றி பெர்க்சனின் இலக்கியப்படைப்பிலான ஆர்வத்தைக் கொண்ட ஒரு புத்துயிர்ப்பு எழுந்தது.

ஹென்றி பெர்க்சனின் அனைத்துப் படைப்புகளும், நனவுநிலையால் *(Consciousness)* பரிட்சிக்கப்பட்டதைப் போல அவரது உண்மையான நேரக் கோட்பாட்டைக் கவனத்திற்கொண்டிருந்தது. ஹெர்பர்ட் ஸ்பென்சரின் பரிணாம தத்துவத்தை மேம்படுத்த முயற்சித்த போது, அவர் இந்தக் கோட்பாட்டை முன்வைத்தார். மனிதனின் இறப்பு உணர்வையும், புதிய நினைவின் தொடர்ச்சியான அடைவையும் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு சுற்றுவதையும் *(Rolling)*, அவிழ்ப்பதையும் *(Unrolling)* ஒப்பிட்டு விளக்கினார். எல்லாத் தருணங்களும் எவ்வாறு பன்முகத்தன்மை கொண்டவை என்பதை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான அவற்றின் வழியாக ஒடுகின்ற, அவற்றைச் சேகரித்து தக்கவைத்துக் கொள்ளுகின்ற உணர்வின் ஒரு போக்கின் ஊடான ஆயிரம் நிழல்களின் ஒரு பின்காட்சித் தோற்றமாக *(Spectrum)* இது உள்ளது.

அவ்வாறே, தூய, பிரிக்க முடியாத இயக்கத்தைப் பிரதிநிதித்துப் படுத்துவதற்கான ஒரு புள்ளியில் சுருங்கி பின்னர் காலவரையின்றி வரையப்பட்டு, படிப்படியாக நீண்டு நீண்டு வளர்கின்ற ஒரு கோட்டை உருவாக்கும் நிலையிலான மீள் துண்டு *(Piece of Elastic)* ஆகவும் இது உள்ளது என்று குறிப்பிட்டார்.

என்றாலும், இந்த காட்சிகள் பொருத்தமற்றதாக உள்ளதோடு, கருத்தை மறைமுகமாக காட்ட மட்டுமே முடியும். முதலாவது, மிகவும் ஒரேவிதமானதாக *(Homogeneous)* உள்ளது. இரண்டாவது, காலம் மாற்றமுறுவதினுடைய நிலையான தன்மையில் இருக்கும் நிலையில் இணைந்ததாகவும், முழுமையானதாகவும் உள்ளது. மூன்றாவது, கருத்தின் பன்முகத்தன்மை கொண்ட இயல்பை மறந்துவிடுகிறது. உண்மையில், பெர்க்சன் ஒருவர் உருவாக்கக் கூடிய கருத்தின் *(Idea)* வேறு எந்த உருவத்திற்கும் *(Image)* ஒரே மாதிரியாகவே இவ்விடயம் உள்ளதாகக் கருதுகிறார்.

பெர்க்சன் இந்த கருத்து *(Idea)* என்பதை, “காலப்பகுதி” *(Duration)* என்று அழைக்கிறார். அது, எண்ணளவிலானது *(Quantitative)* அன்று. மாறாக, தரவளவிலானதும் *(Qualitative)*, மறைமுகமானதும், விரிவாக்கப்படாததும், பன்மைத்துவமானதும், அதேநேரம் ஒருமையானதும், அசைவியக்கமானதும், தொடர்ந்தும் தன்னில் தாக்கம் செலுத்தக் கூடியதும் என்பதாக வரையறுக்கிறார். எவ்வாறாயினும், “காலப்பகுதி” என்பது எண்ணக்கருக்களால் கூட விளக்க முடியாது என்பதை பெர்க்சன் நம்புவதைக் கருத்திற்கொள்ள வேண்டும்.

பெர்க்சன் எண்ணக்கருக்களை *(Concepts)* உருவாக்குவதை “பகுப்பாய்வு” *(Analysis)* என்று அழைக்கிறார். அது, ஒரு போதும் முழுமையானதைப் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டாது என்றும் நம்புகிறார். அவர் இதனை ஒவ்வொரு கோணத்திலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் ஒரு தொகுப்பையுடைய ஒரு நகரின் மாதிரியையும், மொழிபெயர்ப்பிலான ஒரு கவிதையையும் உருவாக்குவதற்கும், வியாக்கியானத்தின் மீது எழுந்த வியாக்கியானத்தைக் கொண்டிருப்பதற்கும் இடையில் ஒப்பிடுகிறார். நகரத்தின் மாதிரியானது ஒரு போதும் நகரத்தில் இருக்கும் உணர்வை பிரதிநிதித்துவப்படுத்தாது. மொழிபெயர்ப்போ, வியாக்கியானங்களோ ஒரு போதும் நகரத்திலே நடைபவனியைக் கொண்டிருப்பதனுடைய எளிய பரிமாண மதிப்பைக் கொடுக்க முடியாது. உண்மையில், குறியீடுகள் பொதுமைப்படுத்துவதன் மூலம் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பொருளின் பகுதியையும், அவை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்ற எல்லா பொருட்களின் பகுதியையும் எப்போதுமே சிதைத்துவிடுகின்றன என்பதாக அவர் கூறினார்.

“காலப்பகுதி” என்பதை உள்ளுணர்வு மூலம் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். தனக்குள் தனித்துவமாகவும், திறனற்றும் இருப்பதைப் புரிந்துகொள்வதற்கான ஒரு பொருளினூடாக கொண்டு செல்லப்பட்ட

ஒன்றினால் அமைந்த அனுதாப உணர்வு போன்றது இது. உள்ளுணர்வு என்பது ஒரு முழுமையான மெய்யியல் முறையாகும். அது, தன்னை ஒரு காலத்திற்குள் நிறுத்துவதையும், அதை தொடர்ச்சியான பன்முகத்தன்மைக்கு விரிவுபடுத்துவதையும், ஒரு இருமைவாதத்தை உருவாக்க (உண்மையில் அவை ஒன்றாக இருப்பதைக் காண்பிக்கும் முன்) அதனுள் உள்ள முனைகளை வேறுபடுத்துவதையும் உள்ளடக்குகின்றது. இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, பன்முகத்தன்மையாகவோ அல்லது ஒரு ஒருமையாகவோ அன்றி இருக்கும் தன்னையே அதாவது காலப்பகுதியையே குறிப்பிட முடியுமே தவிர, வேறு ஒன்றையுமல்ல. ஆனால், எந்தக் கண்ணோட்டத்திலிருந்து ஒருவர் அதை மீண்டும் உருவாக்குகிறார் என்பதைப் பொறுத்து, ஒருவர் அதனை ஒற்றைத்தன்மை வாய்ந்ததாகவோ அல்லது பன்முகத்தன்மை கொண்டதாகவோ உருவாக்கிக் கொள்கிறார். எனவே, “சாராம்சப் பன்மைவாதம்” *(Substance Pluralism)* மற்றும் “சாராம்ச ஒருமைவாதம்” *(Substance Monism)* ஆகியவை உண்மையில் ஒரே தோற்றப்பாட்டின் இரு பிரதிநிதித்துவங்களாகும்.

ஹென்றி பெர்க்சனுக்கு, அவருடைய உயர்வான மற்றும் உயிரோட்டமான கருத்துக்கள், அவை வழங்கியிருந்த அற்புதமான திறமைகள் ஆகியவற்றின் அங்கீகாரமாக 1927ம் ஆண்டில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 20ம் நூற்றாண்டு பிரெஞ்சு தத்துவம்

20ம் நூற்றாண்டு பிரெஞ்சு மெய்யியலானது பல்வேறு சிந்தனைப் பள்ளிகளின் எழுச்சியை தன்னகத்தே கொண்டு திகழ்ந்தமை விசேட அம்சமாகும். அவற்றுள் பொய்ன்காரே, பெச்லார்ட், கவெய்லெஸ் மற்றும் வுய்லெமின் ஆகியோரைக் கொண்ட அறிவியல் மெய்யியல் *(Philosophy of Science)* ஒன்றாகும். அவ்வாறே, கார்ட்டீசியன் வடிவத்தில் வழங்கப்பட்ட மற்றும் ஜேர்மன் சிந்தனையால் செல்வாக்கைப் பெற்ற தோற்றப்பாட்டியல் *(Phenomenology)* மற்றொன்றாகும். இதில் குறிப்பாக, ஹுஸெர்ல் மற்றும் ஹைடெக்கரின் தோற்றப்பாட்டியலைக் குறிப்பிட முடியும். தோற்றப்பாட்டியலானது, 20ம் நூற்றாண்டு முழுவதும் தொடர்ச்சியாகக் கவனிக்கத்தக்கதாக உள்ளது. அதேசயம், இருத்தலியம் மேற்குலகு முழுவதும் பரவி புகழ்பெற்றது. பின்னர், அது அமைப்பியல்வாதத்தின் வருகையால் ஒரளவு மங்கிப்போனது. அமைப்பியல்வாதமானது, பின்–அமைப்பியல்வாதத்தை அணுகுவதற்கான அவசியமான வழிமுறையாகக் கருதப்பட்டது. அதேசமயம், பின்நவீனத்துவ சிந்தனை 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் சிந்தனையாக மாறியது.

### 1. அறிவியல் மெய்யியல்

அறிவியல் மெய்யியல் *(Philosophy of Science)* என்பது அறிவியலின் *(Science)* அடித்தளங்கள், முறைகள் மற்றும் தாக்கங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய மெய்யியலின் ஒரு கிளையாகும். இக்கற்கையின் மையக் கேள்விகள் அறிவியலாக தகுதி பெறுவது எது?, அறிவியல் கோட்பாடுகளின் நம்பகத்தன்மை மற்றும் அறிவியலின் இறுதி நோக்கம் என்ன? என்பவை பற்றியதாகும். பிரான்ஸில், "பிரெஞ்சு வரலாற்று அறிவாய்வியல்" அல்லது "பிரெஞ்சு அறிவாய்வியல்" என்று அறியப்படுகின்ற அறிவியல் மெய்யியலானது, பொய்ன்காரே, பெச்லார்ட், கவெய்லெஸ் மற்றும் வுய்லெமின் ஆகியோரைக் கொண்ட சிந்தனைப் பள்ளியாக இருந்தது.

### ஹென்றி பொய்ன்காரே

ஹென்றி பொன்காரே *(Henri Poincaré)* (1854 – 1912) இவர், கணிதம் தருக்கவியலின் ஒரு கிளை என்று நம்பிய பேர்ட்ரண்ட் ரஸ்ஸல் மற்றும் கோட்லொப் ஃபரோஜே ஆகியோரின் கருத்துக்களுக்கு நேர்மாற்றமான மெய்யியல் கருத்துக்களைக் கொண்டிருந்தார். இவ்விடயத்தில் பொய்ன்காரே கடுமையாக முரண்பட்டார். உள்ளுணர்வு கணிதவியலின் வாழ்வாகும் என்று வாதிட்டார். "அறிவியல் மற்றும் கருதுகோள்" *(Science and Hypothesis)* எனும் தனது நூலில் ஒரு சுவாரஸ்யமான அறிவுப் பார்வையை வழங்கியுள்ளார்.

**காஸ்டோன் பெச்லார்ட்**

காஸ்டோன் பெச்லார்ட் *(Gaston Bachelard)* (1884 – 1962) "அறிவாய்வியல் தடை" *(Epostemological Break)* எனும் புதிய எண்ணக்கருவை முன்வைத்தவர்.

**ஜீன் கவெய்லஸ்**

ஜீன் கவெய்லஸ் *(Jean Cavaillès)* (1903 – 1944) வெளிப்படை முறை (*Axiomatic Method)*, விதிமுறைவாதம் *(Formalism)*, தொகுப்புக் கோட்பாடு *(Set Theory)* மற்றும் கணிதவியல் தருக்கம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்ட அறிவியல் மெய்யியலில் நிபுணத்துவப் பெற்றிருந்தார்.

**ஜுல்ஸ் வுய்லெமின்**

ஜுல்ஸ் வுய்லெமின் *(Jules Vuillemin)* (1920 – 2001) அல்ஜிப்ரா எனும் இயற்கணித மெய்யியலை அறிமுகப்படுத்தினார். மேலும், அறிவின் மெய்யியலில் *(Philosophy of Knowledge)* நிபுணத்துவம் பெற்றிருந்தார்.

## 2. தோற்றப்பாட்டியல்

தோற்றப்பாட்டியலானது, நனவுக்கு *(Consciousness)* தெளிவாகிய ஒன்றாக தோற்றப்பாடு குறித்து வழங்கப்பட்ட விளக்கங்களை விவரிக்கும் விதத்தில் தத்துவார்த்தம் புரியும் ஒரு வழியாக வரையறுக்கப்படுகிறது. எவ்வாறு, நனவுக்குத் தெளிவாகிறது என்பது தொடர்பில் வலிந்து கொடுக்கப்பட்ட விளக்கங்களை இது தவிர்ந்துகொள்ள முயற்சிக்கிறது. பிரான்ஸில், தோற்றப்பாட்டியலானது, ஒரு தீவிர கார்ட்டீசியனிசமாகக் காணப்பட்டது. அது, ஆழ்நிலையான நனவுநிலையை நன்கு புரிந்துகொள்ளும் வகையில், சாரம்ச இருமைவாதத்தை நிராகரித்தது.

இது இருத்தலியல்வாதம் மற்றும் கில்லஸ் டெலூஸ், ஜாக் டெரிடா போன்ற பல பின்நவீனத்துவ மெய்யியலாளர்களின் சிந்தனையில் ஒரு முக்கிய பங்கை வகித்தது. மேலே கூறியோர், உண்மையில் எட்மண்ட் ஹுஸெர்லின் ஆழமான விமர்சன ஆய்வு மூலம் தமது துறைசார் வாழ்வைத் தொடங்கியிருந்தனர். தோற்றப்பாட்டியலானது, இன்றும் கூட பிரான்ஸில் ஆராய்ச்சியின் ஒரு முக்கிய பகுதியாக இருந்த வருகிறது.

**இம்மானுவல் லெவினாஸ்**

இம்மானுவல் லெவினாஸ் *(Emmanuel Lévinas)* (1906 – 1995) எட்மண்ட் ஹுஸெர்லின் "கார்ட்டீசிய தியானங்கள்" எனும் நூலை தான் மொழிபெயர்த்ததன் ஊடாக பிரான்ஸ் தேசத்திற்கு தோற்றப்பாட்டியலை அறிமுகம் செய்த முதல்நபராகத் திகழ்கிறார். லெவினாஸ் மெய்யியலில் ஒழுக்கவியலை முதன்மையான ஒன்றாகக் கருதினார். அதனை

பௌதீகவதீதத்திற்கு முந்தியதாகவும், முதல் மெய்யியலாகவும் கருத வேண்டும் என அவர் அறிவித்தார். அவர், "மற்றமை" *(Other)* மற்றும் "முகம்" *(Face)* ஆகிய கோட்பாடுகளைக் கொண்டமைந்த ஒழுக்கத் தத்துவத்தை உருவாக்கினார். இது, மேக்ஸ் ஷெல்லரின் மறைவுக்குப் பின்னர் காணாமல் போன தோற்றப்பாட்டியல் தொடர்பான ஒழுக்கவியலை அறிமுகப்படுத்தியது.

**மாரிஸ் மெர்லியோ பொண்டி**

மாரிஸ் மெர்லியோ பொண்டி *(Maurice Merleau-Ponty)* (1908 – 1961) புலக்காட்சியின் *(Perception)* அடித்தளங்கள் பற்றிய அக்கறையைக் கொண்டிருந்தார். ரேனே டேக்கார்டின் "கொஜிடோ" மற்றும் சாரம்ச இருமைவாதம் ஆகிவற்றிற்கு ஒரு மாற்றீடாக அவருடைய பொருள்–உடல் *(Subject-Body)* கோட்பாடு உருவாக்கப்பட்டிருந்தது. மனதுக்கும், வெளி உலகத்துக்கும் இடையிலான தெளிவான வேறுபாட்டிற்கு மாறாக, பிந்தையது முந்தையவற்றின் தொடர்ச்சியாக இருந்தாலும், பொருள்–உடல் என்பது பிரதிபலிப்புக்கு முந்தைய பொருள், பொருளின் புலக்காட்சி மற்றும் சிக்கலான பின்னிப்பிணைப்பாகிய உலகு பற்றிய ஒரு உள்ளமைக் கணக்காகும் என்றார்.

**பவுல் ரிக்கூர்**

பவுல் ரிக்கூர் *(Paul Ricœur)* (1913 – 2005) பிரான்ஸ் தேசத்திற்கு தோற்றப்பாட்டியலை அறிமுகம் செய்தவர்களில் ஒருவர். அவர் தோற்றப்பாட்டியல் விவரிப்பை பொருள்கோலியலுடன் *(Hermeneutics)* இணைத்ததில் மிகவும் பிரபலமானவர். இவர் பொருள்கோலியல்சார் தோற்றப்பாட்டியல் முறைகளில் புரட்சியை ஏற்படுத்தியிருந்தார். மேலும், இவர் புராணம், விவிலிய வியாக்கியானம், உளப்பகுப்பாய்வு, உருவகக் கோட்பாடு மற்றும் உரைக் கோட்பாடு ஆகிய ஆய்வுப்பரப்பை கருத்திற்கொண்ட ஒரு விரிவான பரப்பை உள்ளடக்கியதான பனுவல் வியாக்கியானக் கற்கையை விருத்தி செய்திருந்தார். இப்பங்களிப்புக்களுக்காக கலை மற்றும் தத்துவத்தில் "கியோட்டோ பரிசு" வழங்கி ரிக்கூர் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 3. இருத்தலியம்

இருத்தலியம் *(Existentialism)* என்பது 20ம் நூற்றாண்டின் முதல் பகுதியில் ஒரு முக்கிய சிந்தனைப் பள்ளியாக வளர்ந்தது. பாரம்பரியமாக, இருத்தலியமானது மனித நிலை குறித்து அக்கறை கொண்டதாக இருந்தது. மேலும், இது நோக்கம், சுதந்திரம் மற்றும் மற்றமையின் அனுபவம் போன்ற தலைப்புகளை ஆராய்கிறது. சோரன் கீர்கேகார்ட், பிரிட்ரிச் நீட்சே மற்றும் மார்ட்டின் ஹைடெகர், அதே போல லெபென்ஸ்பிலோசோபி போன்ற மெய்யியலாளர்களிடம் இதன் சிந்தனை வேர்களைக் கண்டுகொள்ள முடியும்.

ஆனால், பிரெஞ்சு தோற்றப்பாட்டியலாளரான ஜீன்–பால் சார்த்தரின் சிந்தனையுடன் இது மலர்ந்தது.

**ஜீன்–பால் சார்த்தர்**

ஜீன்–பால் சார்த்தர் *(Jean-Paul Sartre)* (1905 – 1980) தனது இருத்தலியத்தை ஒரு நிலையான நாத்தீகக் கோட்டிலிருந்து அனைத்து முடிவுகளையும் வரைவதாக வரையறுத்துக் கூறினார். அவரது முக்கிய ஆய்வறிக்கை என்னவெனில், இருப்பு சாரத்திற்கு முந்தியது என்பதாகும். இதனை பின்வருமாறு எடுத்துக்காட்டுகளின் மூலமாக விளக்குகிறார்.

கத்தி போன்ற ஒரு பௌதீகமற்ற பொருளைக் கொண்டு, ஒரு கைவினைஞர் துண்டுதுண்டான ரொட்டியைப் போன்ற சாரத்தை துண்டாக்குகிறான். பிறகு அதன் சாரத்தை நிறைவேற்றுவதையே தனது நோக்கமாக் கொண்ட ஒரு பொருளை உருவாக்குகிறான். இருப்பினும், கடவுள் இல்லாமல் டெலியோலோஜிகல் அர்த்தத்தில் மனிதனின் சாரத்தை உருவாக்கிய கைவினைஞர் எவரும் இல்லை. ஆகவே, முதல் மனிதன் சுதந்திரமாகப் பிறந்தான். உலகில் தூக்கி எறியப்பட்டான். அவனது செயல்களுக்கான ஒரே பொறுப்பு அவன் தோள்களில் உள்ளது. பின்னர், அவன் செயல்களின் மூலம் தன்னுடையது மட்டுமல்ல, மனிதன் இருக்க வேண்டும் என்று தான் நம்புகின்றவற்றினதும் சாரத்தை அவன் வரையறுக்கிறான்.

எனவே, சாட்டுப்போக்குகள் மூலமாக இந்த பொறுப்பை மறுப்பதைத்தான் சார்த்தர் மோசமான நம்பிக்கை என்று அழைக்கிறார். ஜீன்–பால் சார்த்தர் ஒரு தலைமுறையினருக்கு செய்தித்தொடர்பாளர் போன்று காணப்பட்டார். ஆனால், அவரது செல்வாக்கு அமைப்பியல்வாதத்தின் வருகையால் குறைந்துபோனது.

**அல்பேர்ட் காமுஸ்**

அல்பேர்ட் காமுஸ் *(Albert Camus)* (1913 – 1960) தன்னை ஒரு இருத்தலியல்வாதி என்று முத்திரை குத்துவதை நிராகரித்து, தன்னை ஒரு "அபத்தவாதி" *(Absurdist)* என்றே அழைக்க விரும்பினார். "த மித் ஆஃப் சிசிஃபஸ்" எனும் நூலின் தொடக்க பக்கங்களில், தான் மெய்யியலின் அடிப்படையான கேள்வி என்று கருதுகின்றதை குறிப்பிட்டு விளக்குகிறார்.

அதாவது, தற்கொலை அபத்தமான உலகிற்கு ஒரு சரியான பதிலாகுமா? இது தொடர்பில் ஒரு கல்லை அது மீளவும் உருண்டு வருவதற்கு ஒரு மலையின் மேலே தள்ளுகையில் தன்னை நிரந்தரமாக அழித்துக் கொள்ளும் நிலையில் சிசிஃபஸின் கதைக்கு கடவுளற்ற வாழ்க்கையை ஒப்பிடும் அல்பேர்ட் காமுஸ், மேலே உள்ள கேள்விக்கு "இல்லை. அது ஒரு புரட்சியை வேண்டிநிற்கிறது" என்று பதிலளிக்கிறார். ஒரு மனிதனின் மனதை நிறைவுபடுத்துவதற்கு ஒரு கஷ்டப்படலாக இருந்தாலும் கூட அதுவே போதுமானதாகும். சிசிஃபஸ்

மகிழ்ச்சியாக இருப்பதை ஒருவர் அவசியம் நினைவிற்கொள்ளல் வேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

**சைமோன் டி பியூவோர்**

சைமோன் டி பியூவோர் *(Simone De Beauvoir)* [1908 – 1986] ஒரு பெண் இருத்தலியல் மெய்யியலாளரும், பெண்ணியவாதியும் ஆவார். மர்மமான ஒன்றின் தவறான ஒளிவீச்சு பெண்களைச் சுற்றியுள்ளதன் மூலம், மனிதன் அவளை "மற்றமை"யாக மாற்றிவிட்டான் என்று அவர் நம்பினார். மேலும், பெண்கள் இந்த ஒளிவீச்சில் *(Aura)* ஒரே மாதிரியாக இருந்ததாகவும், இது பெண்களைப் புரிந்துகொள்ளாமல்விட, தவிர்ந்துகொள்ள மனிதனால் ஒரு சாட்டாகப் பயன்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பியூவோரின் பார்வையில், "மற்றமை" எப்போதும் கீழ்வர்க்கமாகவே இருக்கிறது. ஆனால், இருப்பு சாரத்திற்கு முந்தியது என்ற சார்த்தரின் ஆய்வறிக்கை ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பொருந்தும் என்றும், பெண்கள் தங்களின் தேர்வுகள் மற்றும் செயல்களின் மூலம் இந்த ஒளிவீச்சைக் கடந்து, தாம் கீழ்நிலை வர்க்கமாக இருப்பதை நிராகரித்துவிட முடியும் என்று பியூவோர் கூறுகிறார்.

**4. அமைப்பியல்வாதம்**

முன்னர் குறிப்பிட்டபடி, பிரெஞ்சு அமைப்பியல்வாதமானது சமூகம், மொழி மற்றும் மனித மனம் ஆகியவற்றை உருவாக்கும், கட்டுப்படுத்தும், பாதிக்கும் அடிப்படை அமைப்புகளுடன் முதன்மையான தொடர்பைக் கொண்டுள்ளது. இதன் வேர்களை மொழியியலில் அக்கறை கொண்டிருந்த பேர்டினாண்ட் டி சஸ்ஸூரின் சிந்தனையில் கண்டுகொள்ள முடிகின்றது. ஆனால், விரைவில் அமைப்பியல்வாதமானது மாந்தரியல், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் உளவியல் ஆகியவற்றில் பயன்படுத்தப்படத் தொடங்கியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அறிவுசார் சிந்தனையில் அமைப்பியல்வாதம் ஒரு முக்கிய பங்கை வகித்தது. கிளாட் லெவி–ஸ்ட்ராஸ் மற்றும் ஜாக் லக்கான் போன்ற சிந்தனையாளர்களின் சிந்தனையில் அமைப்புகளால் வரையறுக்கப்பட்டதைப் போன்று மனிதனின் கருத்துக்கான சுதந்திரத்தின் இருத்தலியல் கருத்துக்களை அது நிராகரித்துவிட்டது. எவ்வாறாயினும், இந்த நூற்றாண்டின் முடிவில், அது தனக்கு மட்டுமல்ல அது உருவாக்கிய பின்–அமைப்பியல்வாதம் மற்றும் கட்டவிழ்ப்புவாதம் போன்ற சிந்தனைப் பள்ளிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது.

**கிளாட் லெவி–ஸ்ட்ராஸ்**

கிளாட் லெவி–ஸ்ட்ராஸ் *(Claude Lévi-Strauss)* [1908 – 2009] சஸ்ஸூரின் அமைப்பியல்வாதத்தை மாந்தரியலுக்குப் *(Anthropology)* பயன்படுத்தினார்.

இது சிலநேரங்களில், பழங்குடியினரின் கனவுகளுக்கு மிகவும் பிரபலமானதாகக் காணப்பட்டது.

**ரோலண்ட் பார்த்ஸ்**

ரோலண்ட் பார்த்ஸ் *(Roland Barthes)* (1915 – 1980) ஒரு இலக்கிய விமர்சகரும், சஸூரின் சிந்தனையை இலக்கியக் கோட்பாட்டிற்குப் பயன்படுத்திய குறியீட்டியலாளரும் ஆவார். "புராணவியல்கள்" *(Mythologies)* எனும் நூலில் பார்த்ஸ் கட்டுரைகள், விளம்பரங்கள், திரைப்படங்கள் போன்றவற்றை ஆராய்ந்து, அவற்றில் ஆழமாக இடம் பிடித்திருக்கும் முதலாளித்துவ பிரச்சாரத்தை நிரூபித்தார்.

இரண்டாம் நிலை குறிகளாக இந்த புராணங்களை அவர் விவரித்தார். பச்சைநிற போத்தல்களின் ஒரு குறிப்பிட்ட வடிவமானது, சிவப்புநிற மதுவை *(Wine)* குறித்து நிற்கின்றது. முதலாளித்துவம் இந்த குறிப்பானுக்கு, இரண்டாம் நிலைக் குறிப்பானைக் கொடுக்கின்றது. அதாவது, நிதானமான, ஆரோக்கியமான, வலுவான மது என்பதுதான் அந்த குறிப்பானாகும். இது தயாரிப்புகளை விற்கவோ அல்லது அதன் தரத்தை நிலைநிறுத்துவதற்காகவோ இருக்கிறது என்பதாக பார்த்ஸ் குறிப்பிடுகிறார்.

**ஜாக் லக்கான்**

ஜாக் லக்கான் *(Jacques Lacan)* (1901 – 1981) ஃபிராய்டின் சிந்தனையில் உணரப்பட்ட தவறுகள் மற்றும் சஸூர், ஸ்ட்ராஸ், பார்த்ஸ் ஆகியோரின் கோட்பாடுகளின் மூலம் ஃபிராய்டின் தொடரான விளக்கத்தில் காணப்பட்ட தவறுகளை சரிசெய்யும் விதத்தில் அமைப்புகளின் *(Structures)* அடிப்படையில் மனதை விளக்க முற்பட்ட ஒரு உளப்பகுப்பியலாளர் ஆவார்.

ஹேக்கலின் "ஆன்மாவின் தோற்றப்பாட்டியல்" *(Phenomenology of Spirit)* மீதான அலெக்ஸாண்ட்ரே கோஜோவின் *(Alexandre Kojève)* சொற்பொழிவுகளின் மூலம் ஜி. டபிள்யூ. எஃப். ஹேக்கல் மற்றும் மார்ட்டின் ஹைடெகர் போன்ற ஜேர்மன் மெய்யியலாளர்களால் செல்வாக்குக்கு உள்ளானவராக லக்கான் காணப்பட்டார்.

**லூயிஸ் அல்தூஸ்ஸர்**

லூயிஸ் அல்தூஸ்ஸர் *(Louis Althusser)* (1918 – 1990) மற்றும் முக்கியமாக எட்டியென் பாலிபர் உட்பட அவரது சகாக்கள் சார்த்தரியன் மற்றும் மேற்கத்திய மார்க்சியங்களில் "மனிதமுதல்வாதம்" என்று மிகவும் அழைக்கப்பட்ட போக்குக்கு எதிராக, அமைப்பியல்வாதத்திலிருந்து பெற்ற உள்ளொளிகளைப் பயன்படுத்தி மார்க்சியத்தை மீண்டும் உருவாக்கினர். இளம் ஹேக்கலிய மார்க்சுக்கும், பின்னைய டாஸ் கபிடலின் மார்க்சுக்கும் இடையிலான ஒரு

“அறிவாய்வியல் இடைவெளி”யை விவரித்ததன் ஊடாக அல்தூஸ்ஸர் மார்க்ஸின் படைப்புகளைப் பற்றிய ஒரு புதிய வாசிப்பை வழங்கினார். பொருளாதார நிலை மற்றும் கோட்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியதன் மூலம் அல்தூஸ்ஸர் ஈ. பி. தோம்சன் போன்ற சமூக வரலாற்றாசிரியர்களுடன் முரண்படுபவராகக் காணப்பட்டார்.

## பின்–அமைப்பியல்வாதமும், பின்–நவீனவாதமும்
## *(Poststructuralism and postmodernism)*

20ம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் பின்–நவீனத்துவ சிந்தனை என்று மிகவும் அழைக்கப்பட்டதின் உதயம் காணப்பட்டது. இந்த உதயம், குறிப்பாக பிரான்ஸில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இருப்பினும், இந்த வார்த்தையை வரையறுப்பது மிகவும் கடினமானது. உண்மையில், இது வேறுபட்ட மெய்யியலாளர்களின் குழுவிற்கு தவறாகப் பிரயோகிக்கப்பட்ட குழப்பமே தவிர வேறொன்றுமில்லை என்று சிலர் கருதுகின்றனர். இருப்பினும், இது பாரம்பரிய மேற்கத்திய சிந்தனை, குறிப்பாக முரண்பட்ட இருகுழுக்கள் மற்றும் அமைப்பியல்வாதம், தோற்றப்பாட்டியல், இருத்தலியல்வாதம் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்ட முன்னேற்ற நம்பிக்கை ஆகியவற்றின் ஒரு விமர்சனமாகப் பார்க்கப்படுகின்றது.

### ஜீன்–பிரான்ஸொய்ஸ் லியோடார்ட்

ஜீன்–பிரான்ஸொய்ஸ் லியோடார்ட் *(Jean-François Lyotard)* (1924 – 1998) பின்–நவீனவாதத்தை "இயல்கடந்த கதைக்கூற்றுகள்" *(Metanarratives)* இற்கு எதிரேயான ஐயவாதமாக வரையறுத்தார். "மெடானரேடிவ்" *(Metanarrative)* என்பது எல்லாவற்றையும் உள்ளடக்கிய, அவற்றை கணித்துக் கூறுகின்ற ஒரு பெரிய பிரமாண்டமான கதையாகும். இதற்கு மார்க்சியத்தை ஒரு எடுத்துக்காட்டாக கூறமுடியும். அது நவீன முதலாளித்துவ வர்க்கப் பிரிவின் முதலாளி மற்றும் பாட்டாளி பற்றிய ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று இணை உரையாக கம்யூனிஸத்தை விளக்குகின்றது.

லியோடார்ட் நவீனத்துவத்தின் இன்றியமையாத அம்சமாக மெடானரேடிவ்வைக் கருதினார். ஆகவே, பின்–நவீனவாத சூழ்நிலையானது நுண்ணிய விவரிப்புகளின் ஒரு பன்முகத்தன்மையோடு மெடானரேடிவ்களை மாற்றீடுசெய்வதாகும். அல்லது லியோடார்ட் அவற்றை மொழி விளையாட்டுகள் என்று அழைத்த முறையீடுகளாகும். இந்த மொழி விளையாட்டுகள் எந்தவொரு அரவணைப்பு அமைப்பையும் இழந்து நிற்கின்றன. மாறாக, மெடானரேடிவ்களை விவரிக்க முடியாதவையாக மாற்றுகின்ற தகவல் தொலைத்தொடர்பு மற்றும் வெகுஜன ஊடகத்துறைகள் போன்றவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சிகளால் கொண்டுவரப்பட்டவையாக உள்ளன என்பதாக அவர் குறிப்பிட்டார்.

### மிஷேல் ஃபூக்கோ

மிஷேல் ஃபூக்கோ *(Michel Foucault)* (1926 – 1984) சரி — பிழை, விவேகம் – பைத்தியம், மற்றும் மனித இயல்பு போன்ற முழுமையான விடயங்கள் பற்றிய இதேபோன்ற ஐயவாதத்தை எழுப்பியிருந்தார். அவருடைய முறைமை, அத்தகைய கருத்துக்களை மறுப்பதாக இருக்கவில்லை. மாறாக, அவற்றை

வரலாற்றுமயமாக்குவதாக இருந்தது. தேவைப்பாடானது என்பதற்கு சாத்தியமாக உள்ளதை அவசியம் எனக் கருதப்படுவதை ஆராய்வதாக இருந்தது. மேலும், அறிவு மற்றும் அரசியல், அதிகாரம் மற்றும் அறிவு ஆகியவற்றுக்கு இடையிலான உறவுகளை நிரூபிப்பதாகவும் அமைந்திருந்தது.

அவருடைய முக்கிய ஆய்வுத் துறைகளாக உளவியல், மருத்துவம், ஒழுக்காற்று நிறுவனங்கள் ஆகியவை காணப்பட்டன. ஃபூக்கோ தனது வரலாற்று ஆய்வுகளில் ஹேக்கலியத்திற்கும், டெலெலோஜிகலுக்கும் எதிராக காணப்பட்டார். "பைத்தியம் மற்றும் நாகரீகம்" என்பதில் உளப்பிணியியல் பற்றிய அவருடை ஆய்வுகளின் ஊடாக, மனநலவியலின் வளர்ச்சி என்பது பைத்தியக்காரர்களின் முந்தைய சிகிச்சையில் உருவான வெளிப்படையான முன்னேற்றமாக அமைந்திருக்கவில்லை. மேலும், மனநலவியல் சிகிச்சைகளின் வெளிப்படையான விஞ்ஞான நடுநிலைமையானது, முதலாளித்துவ சமூகத்தை மீறுவதைக் கட்டுப்படுத்துகின்ற ஒரு வடிவமாக இருந்த உண்மையை மறைத்துவிடுகின்றது என்பதாக குற்றம்சாட்டினார்.

#### ஜாக் டெரிடா

ஜாக் டெரிடா *(Jacques Derrida)* (1930 – 2004) அமைப்பியல்வாதத்திற்கு ஒரு பதிலாக கட்டவிழ்ப்புவாதத்தை உருவாக்கினார். கட்டவிழ்ப்புவாதம் என்பது, ஒரு உரையை எடுத்து, அதில் உருவாகின்ற பலவிதமான விளக்க நிலைப்பாடுகளில் காணப்படும் இரட்டை முரண்களை ஆராய்ந்து, அவை ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதையும், நிலையற்றதாகவும், தெளிவற்றதாகவும், வரலாறு மற்றும் கலாசாரம் ரீதியாக வரையறுக்கப்பட்டு இருப்பதையும் காண்பிக்க முயற்சிக்கின்றது.

இருவகைகளின் நெகிழ்வுத்தன்மையைக் காண்பிப்பதன் மூலம், கட்டவிழ்ப்புவாதம் உரையின் நெகிழ்வுத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. எந்தவொரு அர்த்தமும் நிலையானது அல்ல என்று டெரிடா கூறினார். செல்நெறி தத்துவவாதிகள் வழங்க முற்பட்ட இருவகைகளும் கூட நிலையானது அல்ல. ஒரு உள்ளார்ந்த தர்க்கத்தின் மூலமாக உரையானது, தன்னை மீளவும் மறுகட்டமைக்கிறது. எனவே, மிகவும் அடிப்படையான விளக்கங்களை ஏற்றுக்கொள்கிறது என்பதாக அவர் கூறினார்.

#### ஜீன் பாட்ரிலார்ட்

ஜீன் பாட்ரிலார்ட் *(Jean Baudrillard)* (1929 – 2007) ஒரு குறிப்பிட்ட துறையில் எந்தவொரு உண்மையும் கிடையாது என்ற யதார்த்தத்தை நிராகரிப்பதையே மனதிற்கொண்டிருந்தார். இந்த நிராகரித்தலை "சிமுலக்ரா" *(Simulacra)* என்ற சொல்லால் அழைத்தார். இதற்கு எடுத்துக்காட்டாக அவர் ஒரு பேரரசில் வாழ்ந்த "போர்ஜஸ்" என்பவரின் கதையைக் குறிப்பிடுகிறார்.

போர்ஜஸ் ஒரு வரைபடத்தை உருவாக்குகிறார். அது மிகவும் துல்லியமாக இருந்தது. அது முழுநகரத்தையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. பேரரசு வளர்ந்த போது, வரைபடமும் வளர்ந்தது. அவ்வாறே, பேரரசு சிதைந்தபோது அதுவும் சிதைந்தது. பேரரசு முற்றாக அழிக்கப்பட்டபோது, மீதமிருந்த ஒரே பொருள் வரைபடம் மட்டுமே.

பாட்ரிலார்ட்டைப் பொறுத்தவரை, மக்கள் வரைபடத்தில் வாழ்கிறார்கள். எனவே, தவறாகப் பயன்படுத்தப்படுவதால் உண்மை நொறுங்கிவிடுகிறது. இறுதியில், யதார்த்தத்திற்கும், மாயைக்கும் இடையிலான வேறுபாடு நனவினால் பிரித்தறிய முடியாததாக ஆகிவிடுகிறது. பாட்ரிலார்ட் இதனை “மீயதார்த்தம்” *(Hyperreality)* என்று அழைக்கிறார். இதற்கு ரியாலிட்டி தொலைக்காட்சியை ஒரு எடுத்துக்காட்டாக முன்வைக்கிறார். யதார்த்தத்தை பிரதிபலிக்கின்ற மாயையை உருவாக்குவதற்கு தன்னை வரவேற்கின்ற பார்வையாளரில் அது தங்கியிருப்பதைக் காணலாம் என்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

**கில்லஸ் டெலூஸ்**

கில்லஸ் டெலூஸ் *(Gilles Deleuze)* (1925 – 1995) “வித்தியாசம்” பற்றிய ஒரு தத்துவத்தை உருவாக்கினார். அது, கருத்தையும் *(Idea)* அதன் நகலையும் விட நிழலுருவை *(Simulacrum)* உயர்ந்ததாக மதிப்பிட்டது. இது பிளேட்டோவின் முறைமைக்கு மாற்றமாக அமைந்திருந்தது. பிளேட்டோவின் முறைமையானது, கருத்தையும், அதன் நகலையும் மிகுந்த மதிப்பில் வைத்து, நிழலுருவை புறக்கணிப்பதாக அமைந்திருந்தது.

அடையாளம் மற்றும் காரணம் ஆகிவற்றிற்கு முன்னது ஏதுவான “வித்தியாசம்” என்பது அனைத்தையும் உள்ளடக்கியதாக இல்லை. மாறாக, தன்னளவிலான வேறுபாட்டின் காலப்பகுதியில் கட்டப்பட் ஒரு சிறிய புகலிடமாக அதனைக் கருதினார். அதனை அவர் கிறிஸ்தவத்துடன் ஒப்பிட்டார். அங்கு நீங்கள் அசல் பாவத்தையும், மாசற்ற கருத்தாக்கத்தையும் ஏற்றுக்கொண்டால், அப்போது அது அவற்றை அர்த்தமுள்ளதாக மாற்றிவிடுகின்றது.

கவிதைகளை உருவாக்குவதற்கான கவிஞனின் வேலையைப் போல, ஓவியங்களை வரைவதற்கான ஓவியனின் வேலையைப் போல கருத்தாக்கங்களை விரித்தி செய்யும் வேலையாகவே தத்துவம் குறித்த ஒரு ஆக்கபூர்வமான பார்வையை உருவாக்கினார். இந்த காரணங்களுக்காக, டெலூஸ் தான் ஒருமுறை தரமற்றவர் என்று கருதும் தத்துவஞானிகளைப் படிப்பதற்கான ஒரு தனித்துவமான வழியை உருவாக்கினார். தான் படிக்கும் தத்துவஞானிக்குச் சொந்தமானதாகத் தோன்றும், ஆனால் முற்றிலும் மாறுபட்ட புதிய கருத்துக்களை உருவாக்குவதற்கான படிக்கற்களாக அவற்றைப் பயன்படுத்தினார். இதற்கு எடுத்துக்காட்டாக, ஸ்பினோசாவைக்

குறிப்பிடலாம். ஏனெனில், டெலூஸ் அவரை ஒரு அனுபவவாதியாக வாசிப்புச் செய்திருந்தார்.

**ஹெலீன் சிக்சஸ்**

ஹெலீன் சிக்சஸ் *(Hélène Cixous)* (பிறப்பு 1937) பின்–அமைப்பியலை ஏற்றுக்கொண்ட ஒரு பெண் மெய்யியலார் ஆவார். டெரிடாவினால் மிகவும் செல்வாக்கைப் பெற்ற பின்–அமைப்பியலைக் கொண்டு ஒரு பெண்ணிய வியாக்கியானத்தை உருவாக்க முயற்சித்தார். ஆணாதிக்க கலாசாரங்கள் தங்கள் மொழி மற்றும் இலக்கிய நியதிகளில் ஆண் ஆதிக்கத்தை உருவாக்குவதாகவும், இதற்கு எதிராக பெண்ணிய புரட்சி இருக்க வேண்டும் என்பதாகவும் அவர் வாதிட்டார். பெண் எழுத்தாளர்கள் கட்டவிழ்ப்பு முறைகளைப் பின்பற்றுவதையும், ஒரு பெண் என்றவகையில் வாழ்க்கை பற்றிய தங்களின் சொந்த பார்வையை முன்வைப்பதையும் அவர் பரிந்துரைத்தார்.

**முடிவுரை**

மேலே கூறியதைப்போன்று பிரெஞ்சு மெய்யிலானது, ஜேர்மன் மற்றும் பிரித்தானிய மெய்யியலிலிருந்து வேறுபட்டுக் காணப்படுவதைக் கருத்திற்கொள்ள முடியும். பொதுவாக மத்திய காலத்தில் நிலவிய புலமைவாதம் தொடக்கம், நவீன மெய்யியலின் உருவாக்கத்தினூடாக இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் விஞ்ஞானம் *(Philosophy Of Science)*, இருத்தலியம் *(Existentialism)*, தோற்றப்பாட்டியல் *(Phenomenology)*, அமைப்பியல்வாதம் *(Structuralism)* மற்றும் பின்–நவீனவாதம் *(Postmodernism)* வரைக்கும் பல நூற்றாண்டு காலமாக நவீன ஐரோப்பியத் தத்துவங்களில் பாரிய செல்வாக்கை பிரெஞ்சு மெய்யியல் ஏற்படுத்தியுள்ளதைக் கண்டோம்.

பிரெஞ்சு மெய்யியலின் இயல்புகளாவன பன்முகத்தன்மையைக் கொண்டனவாக உள்ளன. அது ஆரம்பத்தில் இறையியலை முதன்மைப் படுத்திய பௌதீகவதீதமாக இருந்தது. அப்போது, புலமைவாதம் அதன் விசேட இயல்பாக இருந்தது. அதனையடுத்து பகுத்தறிவுவாதம், இயங்கியல், ஒழுக்கவியல், ஐயவாதம் என்பன அதில் ஆதிக்கம் செலுத்தின.

பிரெஞ்சு மெய்யியலின் முப்பெரும் பகுதிகளான அறிவாய்வியல், உள்பொருளியல், விழுமவியல் என்பனவற்றில் புதிய சிந்தனைகளை மெய்யியலாளர்கள் முன்வைத்தனர். சாராம்ச இருமைவாதம், ஆன்மமையவாதம், இறைத்தலையீட்டியல்புவாதம் என்பன புதிய மெய்யியல் கோட்பாடுகளாக எழுந்தன.

பிரெஞ்சு மெய்யியலின் குறிப்பிடத்தகக்க இயல்பானது, அரசியல்தன்மையை அது பெற்றிருந்தமையாகும். பிரெஞ்சு மெய்யியலானது அறிவொளிக்கான அடித்தளமாக மாறியபோது சமயசார்பின்மைவாதம், பெண்ணியம், மனிதமையவாதம் போன்ற விசேட எண்ணக்கருக்களின் ஊடாக ஒரு புரட்சிகரமான தத்துவமாக மாறியது. அதுவே, பிரெஞ்சு புரட்சிக்கு வழிவகுத்தது எனலாம்.

புலனறிவாதம், பிறர்நல விருப்புவாதம், மொழியியல், குறியீட்டியல், கட்டவிழ்ப்பவாதம் என்பன பிரெஞ்சு மெய்யியலில் அமைப்பியல் மற்றும் பின்–அமைப்பியல் கோட்பாடுகளாகவும், மெய்யியல் சிந்தனைப் பள்ளிகளாகவும், அதேநேரம் இன்றைய பிரெஞ்சு மெய்யியலின் இயல்புகளைத் தீர்மானிப்பவையாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணைகள்**


1. Gutting, G. (2001). *French Philosophy in the Twentieth Century*. Cambridge University Press.
2. Oxford English Dictionary: altruism. 1989.
3. Henri Bergson (1946), *The Creative Mind: An Introduction to Metaphysics*.
4. José Lopez, *Society and Its Metaphors: Language, Social Theory and Social Structure*, Bloomsbury Academic, 2003.
5. E. Reck (ed.), *The Historical Turn in Analytic Philosophy*, Springer, 2016.
6. *Conversations on Science, Culture, and Time: Michel Serres Interviewed by Bruno Latour*, University of Michigan Press, 1995.
7. Dermot Moran, *Introduction to Phenomenology*.
8. Jean-Paul Sartre, *Existentialism is a Humanism*.
9. Albert Camus, *The Myth of Sisyphus*.
10. Jean-François Lyotard, *The Postmodern Condition*.